பக்கங்கள் 6 விலை சதம் 40

# ஈழநாடு

The EELA NADU

மலர்: 19 கார்த்திகை 9 ஜுமாஹஜ் 12 இதழ் 284

யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 24-11-77

# பிரெஞ்சு ஜனாதிபதியைக் கொலை செய்ய முயற்சி!

பாரிஸ், நவ 23

பிரெஞ்சு ஜனாதிபதியை கொலைசெய்ய முயன்ற இளைஞர், துப்பாக்கியுடன் இன்று கைதுசெய்யப்பட்டார்!

காரில் வேகமாக வந்து கொண்டிருந்த இளைஞன் ஒருவன், பிரெஞ்சு ஜனாதிபதியின் உத்தியோக வாசஸ்தலமான 'எல்ஸி' மாளிகைக்குள் இன்று காலை பிரவேசிக்க முயன்றபோது, காவலாளி அவனைத் தடுத்து நிறுத்தினர். கோபம் கொண்ட அந்த இளைஞன் 'சும்மா' நிற்கவில்லை காரிலிருந்து கீழே இறங்கி, அந்தக் காவலாளியைத் துப்பாக்கியால் சுட்டுக்கொன்றுவிட்டு, கையில் துப்பாக்கியுடன் தனது பயணத்தைத் தொடர்ந்தான் ஆனாலும் சில நிமிடங்களில் அவன் கைதுசெய்யப்படடுவிட்டான்.

'எல்ஸி' மாளிகை நோக்கி காரில் வேகமாக வந்துகொண்டிருந்தபோது, சில பாதசாரிகளை இந்த இளைஞன் தனது காரினால் மோதியதாகவும் பின்னர் தெரிவிக்கப்பட்டது. இந்த விபரங்களை வெளியிட்ட பிரெஞ்சு வானொலி; "இளைஞ

(6-ம் பக்கம் பார்க்க)

### தேசிய அரசுப் பேரவையில் பண்டிதர் கா. பொ. கூறினர்..

# "எங்களுக்குத் தேவை உரிமை; இலட்சியம் தமிழ் ஈழம்தான்!

## 123 நாட்களாகியும் அரசு தமிழர் பிரச்னையைத் தீர்க்கவில்லை!"

(கொழும்பு)

**"எங்களுக்கு உணவு முக்கியமல்ல; உரிமைதான் முக்கியம். தனிநாடு கண்டு, தமிழ் ஈழம் அமைப்பதே எமது இலட்சியம், இதனை அடையத்தான் இங்கு எங்களைத் தமிழ் மக்கள் அனுப்பிவைத்திருக்கின்றார்கள்."**

தேசிய அரசுப் பேரவையில் தீவுப்பகுதி எம். பி. பண்டிதர் கா. பொ. இரத்தினம் பேசுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

வரவு செலவுத் திட்டம் மீதான விவாதம் தேசிய அரசுப் பேரவையில் நேற்றுத் தொடர்ந்தும் நடைபெற்றது. இவ்விவாதத்தில் கலந்துகொண்டு உரை நிகழ்த்துகையில்தான் திரு. கா. பொ. இரத்தினம் மேற்கண்ட கருத்தை வெளியிட்டார்.

### உரிமைதான் வேண்டும்

"உங்களைப் பொறுத்தவரை அத்தியாவசிய உணவுப் பொருட்களும், வாழ்க்கைச் செலவும் பெரிய விஷயங்களாக இருக்கலாம். ஆனல் எங்களுக்குத் தனிநாடுதான் முக்கியமானது. எங்களது உரிமையை மீண்டும் பெறுவதே அதிமுக்கியமானது" என்று கூறிய பண்டிதர் கா. பொ. இரத்தினம் மேலும் கூறியதாவது:

### சிங்களக்கட்சிகளும் தமிழ்க்கட்சிகளும்

"சிங்கள மக்களைப் பொறுத்தவரை அவர்களுக்கு குறிப்பாக இரண்டுகட்சிகள் உண்டு. ஆனல் தமிழ்மக்களுக்கு இருப்பது ஒருகட்சிதான்- தமிழர் விடுதலைக்கூட்டணி மட்டும் தான். தமிழ்ஈழத்தை வென்றெடுக்கவே தமிழ்மக்கள் இங்கு எங்களை அனுப்பிவைத்தனர். இதனை நாம்சாதித்தாக வேண்டும்.

### அரசாங்கம் நினைத்திருந்தால்...

"ஐக்கிய தேசியக்கட்சி ஆட்சிக்கு வந்து 123 நாட்கள் ஆகின்றன, பதவிக்கு வருவதற்கு முன்னரும் பதவிக்கு

(6-ம் பக்கம் பார்க்க)

டைனமைற்மூலம் மீன்பிடித்தல்

## தகவல் கொடுப்போருக்கு சன்மானம்

[யாழ்ப்பாணம்]

"டைனமைற் வைத்து மீன் பிடிப்போர் பற்றிய தகவல் தருவோருக்குச் சன்மானம் கிடைக்கவிருக்கிறது குருநகர் பொலிஸ்நிலையப் பொறுப்பதிகாரி இன்ஸ்பெக்டர் தேவா இவ்வாறு தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் குருநகர் பகுதியில் டைனமைற் வைத்து சிலர் மீன் பிடிப்பதால் ஏனைய தொழிலாளரின் நலன்கள் பாதிக்கப்படுவதாகத் தமக்குப் புகார்கள் வந்துள்ளதாகவும் விரைவில் இதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இதுதவிர வேலணை புங்குடுதீவுத் தாம்போதியிலும் டைனமற் மூலம் அநேகர் மீன்பிடிப்பதைக் காணக்கூடியதாயுள்ளது. பலகால பிரயத்தனத்தின் பேராலும், பலகால முயற்சியின் பேராலும் உருவாக்கப்பட்ட 3 மைல் நீள

(6-ம் பக்கம் பார்க்க)

## புயலின் கோரப் பசி!

ஹைதராபாத், நவ. 23

கடந்த சனிக்கிழமை இரவு ஆந்திராவில் வீசிய பயங்கரப் புயலுக்குப் பலியானவர்களின் தொகை 15 ஆயிரத்திற்கும் அதிகமாக இருக்கலாமென்று ஆந்திரப் பிரதேச முதலமைச்சர் இன்று தெரிவித்தார்.

[6-ம பக்கம பார்க்க]

பதுக்கல்; கொள்ளை லாப வர்த்தகர்கள்மீது:

## யாழ். நகரில் பொலிஸார் திடீர் 'வேட்டை'

(யாழ்ப்பாணம்)

பதுக்கல், கொள்ளை லாப வர்த்தகர்கள்மீது கடுமையான நடவடிக்கைகளை எடுக்குமாறு விலைக்கட்டுப்பாட்டு அதிகாரிகளையும், பொலிஸாரையும் பிரதமர் பணித்ததைத் தொடர்ந்து நாட்டின் பல பகுதிகளிலும் 'திடீர்வேட்டை' நடைபெற்றுவருகிறது.

யாழ். நகரில் நேற்று ஒரு ஹோட்டல்மீது பொலிஸார் நடத்திய திடீர்ச்சோதனையில் ஒரு ருத்தல் பாணை ஒரு சதம் கூடுதலாக விற்பனைசெய்தவர் கைதுசெல்யப்பட்டு பின்னர் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார். இதேபோல, மற்றுமிரு கடைகளில் திடீர்ச் சோதனை நடைபெற்றபோது, கூடுதல் விலைக்கு பால்மாவு விற்பனை செய்யப்பட்டது- பதுக்கிவைத்திருந்தது கண்டு பிடிக்கப்பட்டது. இதில் சம்பந்தப்பட்டவர்களும் கைது செய்யப்பட்டு பின்னர் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

பொலிஸாரும் விலைக்கட்டுப்பாட்டு அதிகாரிகளினதும் இத்திடீர்வேட்டை தொடர்ந்து நடைபெறும் என்று சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தெரிவித்தனர்.

(வேலணை நிரு.)

உ

## திருமண அழைப்பு

நிகழும் பிங்கள வருடம் கார்த்திகை மாதம் 11ந் திகதி (26-11-77) சனிக்கிழமை இரவு 7-09 மணி முதல் 9-08 மணிவரையுள்ள மிதுனலக்கின சுபமுகூர்த்தத்தில்

| | |
|---|---|
| எனது புத்திரன்<br>திருநிறைசெல்வன்<br>**தவராசா**<br>(குமாரவேல் மருந்துச்சாலை பருத்தித்துறை)<br>அவர்களுக்கும் | எனது புத்திரி<br>திருநிறைசெல்வி<br>**கமலாதேவி**<br>அவர்களுக்கும் |

நல்லூர் சிவன்கோவிலில் திருமணம் நடாத்த பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் நண்பர்களும் உறவினர்களும் வருகைதந்து சிறப்பிக்குமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

தனிப்பட்ட அழைப்புக்கள் இல்லை

இங்ஙனம் அன்புள்ள

| | |
|---|---|
| திருமதி தம்பிராசா,<br>ராஜமாணி.<br>247, பருத்தித்துறைவீதி,<br>நல்லூர்,<br>யாழ்ப்பாணம். | திருமதி கந்தவனம்<br>பருத்தித்துறைவீதி,<br>நல்லூர்.<br>யாழ்ப்பாணம்<br>7754 |


## யாழ். வளாகத்தில் கருத்தரங்கு

[யாழ்ப்பாணம்]

இலங்கையின் பிரதேச அபிவிருத்தி என்ற தொடரில் கருத்தரங்கொன்றுஇலங்கைப் பல்கலைக்கழக யாழ்ப்பாண வளாக இராமநாதன் மண்டபத்தில் இம்மாதம் 26-ம் 27-ம் திகதிகளில் நடைபெறவிருக்கின்றது. [கூ-அ]

இந்திய ரயில் விபத்து:

## 20 பேர் பலியானர்கள்! சதித்திட்டமா?

புதுடில்லி, நவ. 23

டில்லி நோக்கி வந்துகொண்டிருந்த கடுகதி ரயில், ரிவாரி அருகில் தடம் புரண்டதில் 20 பேர் பலியானர்கள். 22 பேர் காயமடைந்தனர்.

இந்த ரயில் விபத்தில், பிரபல காங்கிரஸ்வாதியும்பாராளுமன்ற உறுப்பினருமான திரு. பிரகாஷ் சாஸ்திரியும் கொல்லப்பட்டார்.

புதுடில்லியில் இன்றிரவு வெளியான தகவலின்படி, சதி காரணமாகவே இந்த ரயில் விபத்துக்குள்ளாகியிருக்கலாமென்றும், தண்டவாளத்தின் இணைப்புகள் கழற்றப்பட்டிருந்தனவென்றும் தெரியவருகிறது.

# "எதிர்க்கட்சித் தலைவர்பதவி எமது இலட்சியத்தை நிறைவேற்ற அதிகவாய்ப்பளிக்கும்"

## காங்கேசனில் 'அமிர்' கருத்து

[மாவிட்டபுரம்]

'எதிர்க்கட்சித்தலைவர் பதவி எதிர்பாராது கிடைத்த ஒன்றாகும். அதற்காக எமது இலட்சியத்திலிருந்து நாம் பின்வாங்கி விடப்போவதில்லை. இது போன்று எப்பதவிகள் கிடைத்தாலும் அவையல்ல எமக்கு முக்கியம். எமது இலட்சியமே எமக்கு முக்கியமானது. அதை வென்றெடுக்கும்வரை ஓயாது உறங்காது உழைப்போம்.'

இவ்வாறு காங்கேசன்துறை நடேஸ்வராக்கல்லூரி ஆசிரியர் கழகத்தின் சார்பில் தமக்கும், வட்டுக்கோட்டை எம். பி. திரு. தா. திருநாவுக்கரசுவுக்கும் அளிக்கப்பட்ட தேநீர் விருந்துபசாரத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய காங்கேசன்துறைத் தொகுதி பிரதிநிதியும், எதிர்க்கட்சித் தலைவருமான திரு. அ. அமிர்தலிங்கம் கூறினார்.

ஆசிரியர் திரு. பரஞ்சோதி தலைமையில் நடந்த இந்த விருந்துபசாரத்தில் அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

### எதிர்பாராது பிரிந்துவிட்டனர்

எமது தலைவர்கள் எதிர்பாராதவகையில் எம்மைவிட்டுப் பிரிந்தமையாலும், தென்னிலங்கையில் ஐக்கிய தேசியக் கட்சியே பெருவெற்றியடைந்ததாலும் எதிர்க்கட்சித் தலைவர் பதவி நாம் எதிர்பாராது நமக்குக்கிடைத்தது. என்னை எமது கட்சித் தலைவர் என எவரும் இன்று அழைப்பதை விடுத்து எதிர்க்கட்சித் தலைவர் என்றே அழைக்கின்றனர். எதிர்க்கட்சித் தலைவர் பதவியல்ல எமது இலட்சியமே எமக்கு முக்கியம். எமது இலட்சியத்தையடைய இந்தப் பதவி மூலம் ஏராளமான பங்கைச்செய்ய வாய்ப்புக்கிடைத்துள்ளது.

### நாம் கேட்பது பிரிவினையல்ல

சுவீடன் நாட்டு அமைச்சர் ஒருவர் என்னை அண்மையில் சந்தித்து தமிழ்ஈழக்கோரிக்கை பற்றி வினவினார். 'இந்த நூற்றாண்டுத் தொடக்கத்தில் ஒன்றாக இருந்த நோர்வே, சுவீடன் ஆகிய இருநாடுகளில் சுவீடன் நாடு காலப்போக்கில் தனது அபிவிருத்தியை முன்னேற்றத்தை முன்னிட்டு பிரிந்து செல்லமுடியுமானால் 56ம் ஆண்டின்பின் அபிவிருத்தி வேலைகள் எதுவும் செய்யப்படாது புறக்கணிக்கப்பட்டு வரும் தமிழ்ப்பகுதிகளை முன்னேற்ற நாம் தமிழ்ஈழம் கோருவதில் தவறில்லையே? அதிலும் நாம் இழந்த எமது அரசை மீளக்கோரி நிற்கின்றோமே தவிர பிரிவினை என்றுகூடச் சொல்லமுடியாது. உலகநாடுகளில் அடிமை நிலைக்குட்படுத்தப்பட்ட இனங்களது கோரிக்கையைப் போன்றதே எமது கோரிக்கை. எமது கோரிக்கை நீதி நியாயத்தின் அடிப்படையானது. இதை எவரும் மறுத்துரைக்க முடியாது என்று நான் அவரிடம் நன்கு எடுத்துக்கூறிய பின்னர் அவர் எமது கோரிக்கை நியாயபூர்வமானதே என ஒப்புக்கொண்டார். இவ்வாறு வெளிநாட்டினர்கூட ஏற்றுக்கொள்ளக்கூடிய நியாயமானவையே எமது கோரிக்கைகள் ஆகவே நியாயம் வெல்லுமென்பது உறுதி.

வட்டுக்கோட்டை எம். பி. திரு. தா. திருநாவுக்கரசு பேசுகையில்: சேர் பொன் இராமநாதனை சட்டசபைக்கும், அறிஞர் நடேசனை பாராளுமன்றத்திற்கும், தந்தை செல்வாவை பாராளுமன்றத்திற்கும் அனுப்பிப்பெருமைகண்ட காங்கேசன்துறைத் தொகுதி இன்று எதிர்க்கட்சி தலைவரான திரு. அமிர்தலிங்கத்தைஎம். பி.யாக கொண்டதால் தொடர்ந்தும் தனது பெருமையைக் காப்பாற்றிக் கொண்டுள்ளது. திரு. அமிர்தலிங்கத்தின் தலைமையில் எமது இலட்சியத்தை அடையப் போராடியேதீருவோம்'' என்றார்.

மற்றும் ஆசிரியர் கனகநாயகம், கலைப்பேரரசு ஏ. ரி. பொன்னுத்துரை, நடேஸ்வரா அதிபர் பொ. சோமசுந்தரம் உட்படப் பலர் பேசினர்.

---


## வரி விளம்பரம்

### தேவை

கடையில் வேலை செய்யக் கூடியவர் தேவை. நேரில் வரவும். ஆர். செல்லையா அன் கோ 158, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 7758


---

## அரசு அலுவலகத்தில் மழை நீர்?

[வேலணை]

பல லட்சம் ரூபா செலவில் கட்டப்பட்ட யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் இயங்கி வரும் தொழில் திணைக்களக் கிளைக்கு மேல்மாடி ஊடாக மழை காலத்தில் நீர் ஒழுக்கு எற்படுகிறதாம். இதனால் இக் காரியாலயத்தின் நீர் தேங்கும் நிலை உண்டாவதாகக் கூறப்படுகிறது. [உ]

---

## 6 மாதம் பணிபுரிந்தால் பதவி நிரந்தரம்

### விரைவில் அமுலாகும்

[கொழும்பு]

அரசாங்க, கூட்டுத்தாபன சபை கூட்டுறவுத்துறையில் 6 மாதத்திற்கு மேல் சமயாசமய ஊழியராக இருப்பவர்களை நிரந்தரமாக்கும் நடவடிக்கைகளை தொழில் அமைச்சு மேற்கொண்டுள்ளது. இதற்கான சட்டமூலங்கள் விரைவில் தேசிய அரசுப் பேரவையில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

அரசின் இத்திட்டத்தில் 20 ஆயிரத்துக்கும் அதிகமான கூட்டுறவு ஊழியர் பயன் பெறுவர். [இ]

---

## திடீர் சோதனைக்குழு

[கொழும்பு]

கூட்டுறவுக்கடைகளில் இடம் பெறும் ஊழல், மோசடி, பதுக்கல் ஆகியவற்றை முறியடிக்கும் நோக்குடன் உணவுக் கூட்டுறவு அமைச்சு திடீர் பரிசோதனைக் குழுக்களை நியமிக்க உள்ளது என்று உணவுக் கூட்டுறவு பிரதி அமைச்சர் திரு. வி. ராஜகருணா தெரிவித்தார்.

முதலில் 4 அங்கத்தவர்களைக்கொண்ட நான்கு திடீர் பரிசோதனைக் குழுக்களை நியமிக்க அமைச்சு தீர்மானித்துள்ளது. [இ]

---


'Quotations are invited for earth filling part of paddy Field in Vaddukoddai. About 500 cubes of earth are required. Quote per cudo to

Director,
Jaffna College Technical Institute,
Vaddukoddai.

7760


---

# "சமூகவளர்ச்சிக்கு இலக்கியம் உதவுகிறது"

— கலாநிதி சண்முகதாஸ்

[யாழ்ப்பாணம்]

''இலக்கியம் சமுதாயப் பணியை நோக்கமாகக் கொண்டதாக அமையவேண்டும். சமூகத்தின் வாழ்விற்கும், வளர்ச்சிக்கும், எழுச்சிக்கும் இலக்கியப்பணி சிறப்புறச் செயலாற்றுகிறது.''

இவ்வாறு மாலினி கத்தசாமி தலைமையில் இலங்கைப் பல்கலைக்கழக யாழ். வளாகத் தமிழ்ச் சங்கம் நடாத்திய காவலூரர் எஸ். ஜெகநாதன் எழுதிய 'கலட்டுத்தரை' நூல் ஆய்வரங்கில் உரையாற்றிய கலாநிதி அ. சண்முகதாஸ் கூறினார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் ''உழைப்பின் உறுதிக்கும், எழுச்சிக்கும் ஓர் எடுத்துக்காட்டாக இந்நூல் அமைகிறது. பாடுபட்டு உழைப்பதன் மூலம் கலட்டுத்தரையும் வளம் கொழிக்கும் நிலமாக மாறும் என்பதை நூலாசிரியர் நன்கு வெளிப்படுத்தியுள்ளார். குறியீடு மூலமாக ஆசிரியர் சிறப்பான கருத்துக்களை வெளிப்படுத்தியுள்ளார்'' என்றார்.

யாழ் வளாக துணை நூலகர் திரு. நா. சுப்பிரமணியம் பேசுகையில், ''சமுதாயத்திற்கும், தனிமனிதனுக்குமான போராட்டத்தைக் 'கலட்டுத்தரை' சிறப்பாகச் சித்தரித்துள்ளது, மீனவர்கள் வாழும் பிரதேசங்களைக் களமாகக் கொண்டு பல படைப்புக்கள் ஈழத்தில் வெளிவந்துள்ளபோதும் காவலூரர் ஜெகநாதன் தனித்துவத்துடன் இக்குறுநாவலைப் படைத்துள்ளார்'' என்றார்.

இவ்வாய்வரங்கில் முத்துராசரத்தினம், கணபதி கணேசன், நா. தர்மராஜா ஆகியோரும் உரை நிகழ்த்தினர். செயலாளர் இ சமத்திரி நன்றியுரை வழங்கினார். [கா. அ]

---

## நல்லையில் தியாகராஜ உற்சவம்

[அரியாலை]

இளங்கலைஞர் மன்றத்தின் ஆதரவில் எதிர்வரும் 25ம், 26ம், 27ம் திகதிகளில் நல்லூர் திவ்வியஜீவன சங்க மண்டபத்தில் தியாகராஜ உற்சவம் கொண்டாட ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன.

இவ்விழாவில் இலங்கையின் பிரபல நாதஸ்வர தவில் வித்துவான்களும், சங்கீதவித்துவான்களும், வளரும் இளங்கலைஞர்களுமாக ஐந்நூறுக்கும் அதிகமான கலைஞர்கள் கலந்து நிகழ்ச்சிகள் வழங்கவுள்ளனர். [அ]

---

திருமலை பஸ்சேவை சீர்கேடு:

# அமைச்சர் விஜயம் பயனளிக்குமா?

(திருகோணமலை)

திருகோணமலை மாவட்டத்தில் இ. போ. ச. பஸ் சேவை சீர்கேடடைந்துள்ளதாக அதிருப்தி தெரிவிக்கப்படுகிறது.

காலைநேரங்களில் பஸ்சேவை சீர்கேடு உச்சக்கட்டத்தை அடைந்துள்ளதாம்.

இதனால் பொதுமக்கள் குறிப்பாக பாடசாலை மாணவ, மாணவிகள் பெரிதும் கஷ்டமுறுகின்றனராம்.

திருகோணமலை மாவட்ட இ. போ. ச. அதிகாரி, திருகோணமலை எம். பி. திரு. இரா. சம்பந்தன் ஆகியோரிடம் இதுபற்றி முறையிடப் பட்டுள்ளது.

திருகோணமலைக்கு விஜயம் செய்யவிருக்கும் போக்குவரத்து அமைச்சர் ஜனாப் எம். எச். மொஹமத் இச்சீர்கேட்டுக்கு முற்றுப்புள்ளி வைத்து பிரயாணிகள் துயர்துடைப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது. [உ]

---

## விண்ணப்ப முடிவு திகதி நீடிப்பு

[யாழ்ப்பாணம்]

யாழ். லயன்ஸ் கழகம் நடத்தும் நத்தார் - புதுவருட சித்திரப் போட்டி முடிவு திகதி டிசம்பர் மாதம் 15ம் திகதி வரை பிற்போடப்பட்டுள்ளது.

இப்போட்டிச் சித்திரங்களைக் கொண்ட கண்காட்சியும், விற்பனையும் அடுத்த மாதம் 17ம் திகதி மாலை யாழ். நிம்மர் மண்டபத்தில் நடைபெறும்.

இப்போட்டிக்கு விண்ணப்பிக்க விரும்புபவர்கள் ஒரு ரூபா தபாற் கட்டளையுடன் எத்தனை சித்திரங்களையும் அனுப்பலாம் என போட்டி அமைப்பாளர் தெரிவித்துள்ளார்

சித்திரங்களின் அளவு $3\frac{1}{2}$''$\times 5\frac{1}{2}$'' ஆகும்.

இப்போட்டியின்மூலம் கிடைக்கும் நிதியைக்கொண்டு ஏழைச்சிறுவர்களுக்கு பரிசுகள் வழங்கப்படும் என்றும் அமைப்பாளர் தெரிவித்துள்ளார் [இ]

---


## பொலிசி தவறிவிட்டது

வரையறுக்கப்பட்ட புறூடென்சல் அஸ்சுரன்ஸ் கம்பெனியாரால் கணபதிப்பிள்ளை சுப்பிரமணியத்தின் உயிரின் பேரில் கொடுக்கப்பட்ட 5857745-ம் இலக்க பொலிசி உறுதி தவறிவிட்டது. இதைக் கண்டெடுத்தோர் அல்லது இப்பணத்தில் உரிமை கோருபவர் யாராயினும் கொழும்பிலுள்ள தபால் பெட்டி 360 விலாசத்தைக் கொண்ட புறூடென்சல் அஸ்சுரன்ஸ் கம்பெனி மனேஜருடன் இத்திகதியிலிருந்து ஒருமாத காலத்துக்குள் தொடர்பு கொள்ளும்படி கேட்கப்படுகின்றனர். இதன் பின் எவ்வித உரிமை கோரிக்கையும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

புறூடென்சல் அஸ்சுரன்ஸ் கம்பனி (வரை) க்காக
டெல்மேஜ் போசித் அன் கம்பெனி(வரை)
மூக்கிய ஏஜன்ஸ்.

7710


---


## யாழ் லயன்ஸ் கழகம்

### நத்தார் — புதுவருட வாழ்த்து சித்திரப் போட்டி

நிபந்தனைகள்

வாழ்த்து மடலின் அளவு: $3\frac{1}{2} \times 5\frac{1}{2}$ (மடிக்கப்பட்டது)

கடதாசி: தடித்த வெள்ளை போட் அல்லது ட்ரோயிங் பேப்பர் வர்ணம் தீட்டுவதற்கு வாட்டர் கலர், கிறேயன், பெயிண்டிங் ஸ்டிக்ஸ் ஆகியன பாவிக்கலாம்.

பிரவேசக் கட்டணம் ரூபா 1/-

முடிவு திகதி 15-12-77

இப்போட்டிக்கான விண்ணப்பங்கள் ஒரு ரூபா காசுக் கட்டளையுடன் கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும்.

காரியதரிசி, யாழ். லயன்ஸ்கழகம்
சிலோன் மேர்ச்சன்ஸ், ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

# மத்தியகிழக்கு சமாதானம்: புரட்சிகர முடிவு எடுக்கும்நிலையில் இஸ்ரேல்

## வெளிநாட்டமைச்சர் தயான் கருத்து

ஜெருஸலம், நவ: 23

**மந்திய கிழக்கு விவகாரம் தொடர்பாக ஒரு புரட்சிகரமான முடிவை எடுக்க வேண்டிய முக்கிய கட்டத்தில் இஸ்ரேல் இப்போது இருக்கிறது.**

இவ்வாறு இஸ்ரேலிய வெளிநாட்டு அமைச்சர் திரு. ஜெனரல் மோஷே தயான் ஜெருஸலத்தில் தெரிவித்தார்.

எகிப்திய அதிபர் ஜனுப் அன்வர் சதாத்தின் இஸ்ரேலிய விஜயத்தின் பலனுகவே இஸ்ரேல் மத்தியகிழக்கு அமைதி குறித்து உடன்நடவடிக்கை எடுக்க வேண்டிய நிலையில் உள்ளது என்றும் கூறிய ஜெனரல் தயான், இஸ்ரேலின் மத்தியகிழக்கு அமை திக்கான முக்கிய நடவடிக்கை களுக்காக எகிப்து காத்துக் கொண்டிருக்கிறது என்றும் கூறினுர். [இ]

# வெளிநாடுகளுக்கு 68,000 கோடி அமெரிக்க உதவி

வாஷிங்டன், நவ. 23

அமெரிக்கா 1978-ல் வெளிநாடுகளுக்கு 68,000 கோடி டாலர் உதவியை வழங்கவுள்ளது இதுகடந்த ஆண்டை விட 12,000 கோடி டாலர் அதிகமானதாகும்.

உதவிபெறும்நாடுகளில்இஸ்ரேலே முதலிடம் வகிக்கின்றது. புதிய ரக அமெரிக்க ஆயுத தளவாடங்களைக் கொள்வனவு செய்யும் தேவைக்கென 1978ல் இஸ்ரேலுக்கு 18,000 கோடி டாலர்கள் உதவி வழங்கப்படவுள்ளது. இதில் அரைப் பங்கு 'அன்பளிப்பாக' வழங்கப்படவுள்ளது. (இ)

# தேசாய்-கலகன்

## தொலைபேசி சந்திப்பு

புதுடில்லி, நவ. 23

தமிழ் நாட்டிலும் ஆந்திரப் பிரதேசத்திலும் சூருவளியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கும் பிரிட்டன் உதவ முன்வந்துள்ளது.

சூருவளியால் பாதிக்கப்பட்ட மக்கள் பற்றியும் அவர்கள் வேண்டிய உதவிகள் பற்றியும் பிரிட்டிஷ் பிரதமர் திரு. கலகன் இந்தியப் பிரதமர் திரு. மொரார்ஜி தேசாயுடன் நேரடியாகவே தொலைபேசியில் தொடர்பு கொண்டு கேட்டறிந்தார்.

புயல் அகதிகளுக்கு பிரிட்டிஷ் அரசு உதவி வழங்கும் என்றும் திரு. கலகன் திரு. தேசாயிடம் உறுதி கூறினுர். (இ)

# 10வது தடவையாக அமெரிக்க சோதனை

நியூயார்க், நவ. 23

இந்த ஆண்டில் பத்தாவது தடவையாக மேலுமொரு அணு ஆயுதப் பரிசோதனையொன்று அமெரிக்காவில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

20-150 கிலோடொன்கள் ஆற்றலைக் கொண்ட ஒரு அணு சாதனமொன்று நெவாடா பரிசோதனைப் பிரதேசத்தில் வெடிக்கப்பட்டதாக அமெரிக்க பாதுகாப்பு அமைச்சுப் பேச்சாளர் ஒருவர் கூறினுர். (இ)

# "$4\frac{1}{2}$ கோடி தமிழர் தலைவரை விடுதலை செய்க"

(யாழ்ப்பாணம்)

தி. மு. க. தலைவரும், முன்னுள் தமிழக முதல்வரும், எதிர்கட்சித் தலைவருமான கலைஞர் மு. கருணுநிதியை விடுதலை செய்யுமாறு கோரும் மகஜர் ஒன்றை யாழ். திருக்குறள் முன்னணிக் கழகம் பாரதப் பிரதமர் திரு. மொரார்ஜி தேசாய்க்கு அனுப்பிவைத்துள்ளது.

இம்மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது. அண்மையில் திருமதி இந்திரா காந்தி அம்மையார் தமிழ்நாடு வந்தபோது கறுப்புக்கொடி ஆர்பாட்டம் செய்த காரணத்தால் தமிழக எதிர்கட்சித் தலைவர் டாக்டர் மு. கருணுநிதி உட்பட மாக்ஸிய, கம்யூனிஸ் தலைவர்களும், தி. மு. க. தொண்டர்களும் கைது செய்யப்பட்டது ஜனநாயகவிரோத நடவடிக்கையாகும். உலகின் பெரிய ஜனநாயக நாடான இந்தியத் துணைக் கண்டத்தில் இவ்வாறுன நடவடிக்கை கண்டிக்கப்பட வேண்டியதாகும்.

தடைச் சட்டத்தை மீறிக் கறுப்புக் கொடி ஆர்ப்பாட்டம் செய்த கலைஞரையும், ஏனையோரையும் சோடிக்கப்பட்ட சதிக் குற்றச்சாட்டின் பேரில் சிறையில் வைத்திருப்பது மனித உரிமையை குழி தோண்டிப் புதைப்பதோடு ஜனநாய மரபுகளையும் கொலை செய்வதற்கு ஒப்பானதாகும்.

தமிழக ஆட்சியின் பாசிச நடவடிக்கைகளை ஈழத்தமிழர் வன்மையாகக் கண்டிப்பதுடன் இதுவிடயத்தில் இந்திய மத்திய அரசு வாளாவிருக்காது நாலரைக் கோடி தமிழ் மக்களின் தலைவரான கலைஞரை விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்.' [கா-அ]

# வெளிநடப்பு

நியூயோர்க், நவ.23

எகிப்திய அதிபர் அன்வர் சதாத்தின் இஸ்ரேலிய விஜயத்தை ஐ. நா. சபை கூட்டத்தில் சிரியாப் பிரதிநிதி கண்டித்துப் பேசிய போது ஐ. நா. வின் எகிப்துப் பிரதிநிதி வெளிநடப்புச் செய்தார். [இ]

# மற்றுமொரு சூருவளிக்கு 100க்கு மேல் பலி!

திருவனந்தபுரம், நவ. 23

கேரளம், கர்நாடகம் ஆகிய மாநிலங்களை நேற்றுத் தாக்கிய மற்றுமொரு பயங்கரச்சூருவளி நூற்றுக்கு மேற்பட்டோரைப் பலி கொண்டுள்ளதாக அறிவிக்கப் பட்டுள்ளது. சூருவளியை அடுத்து இம்மாநிலங்களின் கடற்கரைப் பகுதிகளில் கடல்நீர் புகுந்து பெரும் அழிவுகளை ஏற்படுத்தியுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டது கேரள மாநிலத்தை அண்டியுள்ள சிறு தீவுகளில் தங்கியிருந்த ஆயிரக்கணக்கான மீனவக் குடும்பங்கள் கடலுக்குப் பலியாகியிருக்கலாம் என அஞ்சப்படுகிறது. [இ]

# கலகன் இந்தியா வருகிறுர்

லண்டன், நவ. 23

பிரிட்டிஷ் பிரதமர் திரு. கலகன் அடுத்த வருடமுற்பகுதியில் இந்தியாவுக்கு விஜயம் செய்யவுள்ளார் என்று லண்டன் செய்தி ஒன்று தெரிவித்தது. [இ]

# சங்கம் அமைப்பர்

[பண்டத்தரிப்பு]

வலிமேற்கு, வலிதென்மேற்குப் பிரிவுகளிலுள்ளஒவ்வொரு கிராமங்களிலும் பீட்றூட் கிழங்குச் செய்கையில் ஈடுபட்டுள்ள சகல விவசாயிகளுக்கும் சேவையாற்றுமுகமாக பீட்றூட் கிழங்கு உற்பத்தியாளர்கள் சங்கங்களை அமைப்பதற்கு வலி மேற்கு கமத்தொழில் போதனுசிரியர் திரு எஸ் சிவபாதம் திட்டமிட்டுள்ளார். [அ]

# ஜோர்டான் மன்னர் ஹுசேனும் இஸ்ரேலுக்கு விஜயம் செய்வார்

அம்மான், நவ: 23

எகிப்திய அதிபர் ஜனுப் அன்வர் சதாத்தை அடுத்து ஜோர்டான் மன்னர் ஹுசேனும் விரைவில் இஸ்ரேலுக்கு விஜயம்செய்வார் என்று அம்மானிலிருந்து கிடைக்கப்பெற்ற செய்திகள் தெரிவிக்கின்றன.

தமது. உத்தேச இஸ்ரேலிய விஜயம் குறித்து சிரிய ஜனுதிபதி ஜனுப் யஸாத்துடன் பேச்சுவார்த்தை நடத்தும் பொருட்டு ஜோர்டான் பிரதம மந்திரியை மன்னர் ஹுசேன் சிரியாவுக்கு அனுப்பியுள்ளார்.

எகிப்திய அதிபர் ஜனுப் சதாத்தின் இஸ்ரேலிய விஜயத்தை மற்றைய அரபு நாடுகள் பலமாகக் கண்டித்த வேளையில் ஜோர்டான் அவ் விஜயத்தை வரவேற்றிருந்தது குறிப்பிடத்தக்கதாகும்.

ஜனுப் சதாத்தின் இஸ்ரேலிய விஜயம் ஏற்றிருந்த மத்தியகிழக்கில் நிரந்தர அமைதிக்கான நம்பிக்கை ஒளியை ஜோர்டான் மன்னரின் இஸ்ரேல் விஜயம் மேலும் பிரகாசிக்கச் செய்யும் என்று அவதானிகள் கருத்துத் தெரிவித்துள்ளனர். (இ)

# பாலர் பாடசாலை ஆசிரியைகள் சஞ்சலம் போக்க 'அமிர்' உறுதி

(யாழ்ப்பாணம்)

வடஇலங்கைத் தமிழ்ப் பாலர் பாடசாலை ஆசிரியைகள் சங்கத் தூதுக் கோஷ்டி ஒன்று எதிர்க்கட்சித் தலைவர் திரு. ஏ. அமிர்தலிங்கத்தை தெல்லிப்பழையில் உள்ள அவரது இல்லத்தில் வைத்துச் சந்தித்தது.

சங்கத்தின் பொதுக் கோரிக்கை உட்பட தமக்குள்ள பிரச்னைகள் குறித்து தூதுக் கோஷ்டியினர் திரு. அமிர்தலிங்கத்திடம் எடுத்துரைத்தனர்.

தொகுதி வாரியாகத் தகுதி உள்ள பாலர் ஆசிரியர் சங்க உறுப்பினர்களின் விபரங்கள் அடங்கிய பட்டியல் ஒன்றும் அவ்வவ் தொகுதி எம். பிக்களிடம் சமர்ப்பிக்கப்பட்ட விபரங்களும் திரு. அமிர்தலிங்கத்திடம் ஒப்படைக்கப்பட்டன தாம் தனிப்பட்ட முறையிலும் எதிர்க்கட்சித் தலைவர் என்ற ரீதியிலும் சங்கத்தின் நியாயமான கோரிக்கைகளுக்கு ஆதரவாகச் செயற்படச் சம்மதிப்பதாகவும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் கல்விக் குழுவில் இடம் பெற்றுள்ள உடுப்பிட்டி, சாவகச்சேரி எம். பிக்களையும் சந்தித்து நிலைமையை விளக்கிக் கூறுமாறும் திரு. அமிர்தலிங்கம் தூதுக் கோஷ்டியினரைக் கேட்டுக் கொண்டார்.

கூடிய விரைவில் சங்கப் பொதுக் கூட்டத்தில் கலந்து கொள்ளவும் அவர் சம்மதம் தெரிவித்தார். (உ)

# உயர்மாணவர் இரவு விருந்து

(அரியாலை)

யாழ்ப்பாணம் பரி. யோவான் கல்லூரிக் கல்விப் பொதுத்தராதர உயர்தர வகுப்பு மாணவர்களின் வருடாந்த இரவு விருந்து இன்று இரவு கல்லூரி பீற்றோ மெமோரியல் மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது.

இவ்விருந்து வைபவத்தில் பிரதம விருந்தினர்களாக யாழ்ப்பாணத் தொகுதி தேசிய அரசுப்பேரவை உறுப்பினர் திரு. வ. யோகேஸ்வரனும், இலங்கைச்சர்வகலாசாலை யாழ்ப்பாண வளாக மனிதஇயல்பீட அதிபர் திரு. ஞாதர் ஜெயசிங்கமும் கலந்து கொள்ள விருக்கிறுர்கள். [அ]

# வேலணைக் கிராமாபிவிருத்தி

(வேலணை)

தீவுப்பகுதியில் உள்ள வேலணை தெற்கு உதவி அரசாங்க அதிபர்பிரிவில் இயங்கிவரும் கிராம அபிவிருத்திச் சங்கங்கள் சுமார் 75,000 ரூபா பெறுமதியான வேலைகளைச் செய்து முடித்திருக்கின்றனவாம். வேலணைக் கிராம அபிவிருத்தி அதிகாரி திரு. ஏ. விஜயநாதன் இதனைத் தெரிவித்தார்.

மேற்படி இத்திட்டங்களுக்கென அரசாங்கம் 50,000 ரூபாவைக் கொடுத்ததெனவும் மிகுதி 25,000 ரூபா வேலைகளை இப்பகுதிகளில் உள்ள கி. அ. சங்கங்கள் தங்களது சுயமுயற்சியினுலேயே செய்தனவென்றும் கூறிய அவர், மேலும் பல திட்டங்கள் நிறைவேற்றப்படவுள்ளதாகவும் கூறினுர். (அ)

# அன்னதானம் வழங்கினர்

(யாழ்ப்பாணம்)

பகவான் ஸ்ரீ சத்திய சாயி பாபாவின் 52வது பிறந்த தினத்தை முன்னிட்டு யாழ்ப்பாணம்மத்திய பகவான் ஸ்ரீசத்தியசாயிபாபா சேவா சமிதியின் மகளிர் பிரிவினர் நேற்று முன்தினம் திருநெல்வேலி முத்துத்தம்பி வித்தியாசாலை விடுதியில் உள்ள குழந்தைகளுக்கு அன்னதானம் வழங்கினர்.

நாடெங்கிலும் பாபாவின் பிறந்ததினக் கொண்டாட்டங்கள் விமரிசையாகக்கொண்டாடப்படுகின்றது. நேற்று யாழ்ப்பாணம் மத்திய பகவான் ஸ்ரீ சத்தியசாயிபாபா சமிதியினர் பாபாவின் பிறந்ததினத்தை யாழ். ரஸிக ரஞ்சன சபாவில் மாலை 5 மணிக்குக் கொண்டாடினர். (கா)

# ஆலயமருகில் இரு சடலங்கள்

(நெல்லியடி)

தொண்டமானுறு செல்வச்சந்நிதி ஆலயத்துக்கருகில் இரு அனுதரவான சடலங்கள் காணப்பட்டன. ஒன்று பெண்ணின் சடலமாகும். சரஸ்வதி மடத்தில் இச்சடலம் கிடக்கக் காணப்பட்டது. சிவந்த மேனியுடைய இச்சடலம் 5 அடி 2 அங்குல உயரமுடையது. ஆணின் சடலம் 5 அடி 7 அங்குலமாகும். இவருக்கு 65 வயது இருக்கும்.

இச்சடலங்கள்மீதான விசாரணைகளை வடமராட்சிப்பகுதி திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு. எம். வி. புவனேந்திரன் நடாத்தினுர். பெண் உடலைப் பரிசோதனை செய்த வைத்திய அதிகாரி டாக்டர் எஸ். ஜிலதரும், ஆணின் உடலைப் பரிசோதனை செய்த வல்வெட்டித்துறை இரந்திராணி வைத்தியசாலையைச் சேர்ந்த டாக்டர் கே. ராசேந்திரமும் இவ்விரு மரணங்களும் இயற்கை மரணங்கள் எனத் தீர்ப்பளித்தனர்.

வல்வெட்டித்துறைப் பொலிஸ் அதிகாரி திரு எஸ். மயில்வாகனம், கிராமசேவகர் திரு. வேலுப்பிள்ளை ஆகியோர் சாட்சியமளித்தனர். (அ)

வன்செயலினுல் பாதிக்கப்பட்ட சகலருக்கும்

# 350 ரூபா புனர்வாழ்வு நிதி 850 ஆக அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

அண்மையில் நாட்டில் ஏற்பட்ட வன்முறைச் சம்பவங்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அரசினல் வழங்கப்பட்டு வந்த 350 ரூபாவை 850 ரூபாவாகக் கூட்டிக்கொடுக்க அரசு முன்வந்துள்ளது

பாதிக்கப்பட்டு இடம் பெயர்ந்து இங்குவந்துள்ள தமிழர்களில் அகதிகள் முகாம்களில் தங்கியிருந்தவர்களைத் தவிர தமது சொந்த இடங்களில் தங்கியிருந்தவர்களும் பாதிக்கப்பட்ட இடங்களுக்குச் சென்றவர்களும் இப்பணத்தைப் பெற்றுக்கொள்ள முடியும் எனத் தமிழர் புனர்வாழ்வுச் சபையினர் தெரிவித்துள்ளனர்

பாதிக்கப்பட்ட இடங்களுக்குச் சென்றவர்கள் அந்தந்தப் பகுதி அரசாங்க அதிபர்களுடன் தொடர்புகொண்டும், பாதிக்கப்பட்டு இடம் பெயர்ந்து வந்து திரும்பிப்போகாதவர்கள் யாழ்ப்பாணப் பகுதி சமூகசேவைப் பகுதியினருடனும் தொடர்புகொண்டு இப்பணத்தைப் பெற்றுக்கொள்ளலாம்.

இதுவரை 350 ரூபா மட்டும் புனர்வாழ்வு நிதியாகப்பெற்றவர்கள் 850 ரூபாவுக்கான மிகுதிப் பணத்தைம் பெற்றுக் கொள்ளலாம் எனவும் புனர்வாழ்வுச் சபை கூறுகிறது.

இதுபற்றிய பூரணமானவிபரங்களை பாதிக்கப்பட்ட தமிழர் புனர்வாழ்வுச்சபைக் காரியாலயத்தில் அறிந்துகொள்ளலாம் என சபைச் செயலாளர் திரு. க. நடராசா நமது நிருபரிடம்தெரிவித்தார். (கா)

## ஆண்டுவிழாவும் புதுநிர்வாகிகளும்

(யாழ்ப்பாணம்)


கொக்குவில் மஞ்ஞேன்மணி அம்மன் இந்து சமய அபிவிருத்திச் சங்க ஒன்பதாவது ஆண்டு நிறைவுவிழா கொண்டாடப்பட்டது.

திரு. வ. ம. நடராசா தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில் அடுத்த ஆண்டிற்கான நிர்வாகிகள் தெரிவு இடம் பெற்றது.

போஷகர்கள் திருவாளர்கள்: க. இராமநாதன், எஸ். டபிள்யு. ஆறுமுகம், எஸ். துரைராஜசிங்கம், தலைவர் க. சுந்தரம், உபதலைவர்கள் வே. தம்பிமுத்து, க. முருகையா, காரியதரிசி சி. மாதவகுமார், உபகாரியதரிசி எஸ். சிவசுப்பிரமணியம், தனாதிகாரி பொ. கனகரத்தினம், உபதனாதிகாரி தட்சணாமூர்த்தி மற்றும் பதின்மூவர் கொண்ட நிர்வாக சபை உறுப்பினரும் தெரிவு செய்யப்பட்டனர். [கா—அ]

## யாருடைய திறப்பு?

மூன்று திறப்புகள் கொண்ட கோர்வை ஒன்று யாழ். ஆஸ்பத்திரி வீதியில் இருந்து எம். துரைராசா என்பவரால் கண்டெடுக்கப்பட்டு "ஈழநாடு" அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் ஆதாரம்காட்டிப் பெற்றுக்கொள்ளலாம்.



கைதடி சைவஅநாதை இல்லத்தின் ஆதரவில் இயங்கும் சைவக் குருத்தினிகள் இல்லத்திற்கு அரஸ்கோ அதிபர் திரு. இ. அரசரத்தினம் இரண்டு தையல்மெஷின்களை அன்பளிப்புச் செய்வதையும் இல்லப்பொறுப்பாளர் திரு. ஆ. கந்தையா தையல் மெஷின்களை கையேற்பதையும் அங்கு வதியும் பிள்ளைகளில் சிலரையும் இப்படத்தில் காணலாம். (இ)

## இருமலைக்கரையில் மிதந்த இராட்சத சுறு

(திருகோணமலை)

திருகோணமலை சுங்க இலாகாவுக்கு அருகாமையில் உள்ள கடலில் இறந்து மிதக்கக்காணப்பட்ட 20 அடி நீளமான இராட்சத சுறு ஒன்று கண்டெடுக்கப்பட்டது

கப்பல் ஒன்றினுல் காயப்படுத்தப்பட்டு இச்சுறு இறந்திருக்கலாம் எனக் கருதப்படுகிறது.

மீனவர்களினுல் கடற்கரைக்குக் கொண்டுவரப்பட்ட இந்த இராட்சத சுறுவை பெருந்தொகையான மக்கள் ஆவலுடன் சென்று பார்வையிட்டு வருகின்றனர். (உ)

## மின் நிறுத்த நீடிப்பால் முல்லைத்தீவு மக்கள் அவதி

(முல்லைத்தீவு)

"முல்லைத்தீவில் மின்சார விநியோகத் தடை இன்னமும் நீங்காததால் பொதுமக்கள் பெரிதும் அசௌகரியமடைந்துவருகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

தற்காலிகமானதாகவே இம் மின்சேவை நிறுத்தம் இருக்கும் எனக் கருதப்பட்டபோதிலும் இந்நிலை தொடரும் நிலையிலேயே உள்ளதாம்.

வைத்தியசாலை, எரிபொருள் நிலையம் முதலானவை மின்சாரம் இல்லாமையால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன. இந்த அவல நிலை நீங்காதா என மக்கள் ஆவலுடன் எதிர்பார்க்கின்றனர். (உ)

# திருக்கேதீச்சரத்தில் திருவாசக விழா

[யாழ்ப்பாணம்]

திருக்கேதீஸ்வரம் ஈழத்துச் சிவன் அடியார் திருக்கூட்டத் திருவாசக மடத்தில் திருவாசக விழா ஒன்பது தினங்கள் வெகு சிறப்பாகக் கொண்டாடப்படவிருக்கிறது.

மார்கழி மாதம் 17 ம் திகதி சனிக்கிழமை முதல் 25 ம் திகதி ஞாயிற்றுக்கிழமைவரை நடைபெறும் இவ்விழாவில் வழமைபோல சாதனையும், திருவாசக விழாவும் நடைபெறும் இவ்விழாவில் 17 ம் திகதி முதல் 22 ம் திகதிவரை புராண படனம், பக்திப் பாடல், சொற்பொழிவுகள் இடம் பெறும்.

23 ம் திகதி வெள்ளிக்கிழமை காலை சிவபூஜை மகாநாட்டுடன் பெருவிழா ஆரம்பமாகும். இதில் சமயச்சான்றோர்களின் சொற்பொழிவுகள், பண்ணிசைப் புலவர்களின் திருவாசக கச்சேரிகள், கூட்டுவழிபாடும்- புராண படனமும் நடைபெறும். மாகேசுரபூசையும் இடம் பெறும்.

26 ம் திகதி திங்கட்கிழமை அதிகாலை நடேசருக்கு அபிஷேகமும் ஆருத்ரா தரிசனமும் நடைபெறும். [கா-அ]

## விவசாயக் கடன் வழங்க நடவடிக்கை

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவுப்பகுதி விவசாயிகளுக்கு விவசாயக் கடன் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதனுல் விவசாயக் கடன் கிடைப்பதில் ஏற்பட்டிருந்த தாமதத்தால் துயருற்றிருந்த விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். குமிழமுனைக்கிராம விவசாயிகளுக்கு முதலில் விவசாயக் கடன வழங்கப்பட்டுள்ளது.

ஏனைய கிராம விவசாயிகளுக்கு படிப்படியாக விவசாயக் கடன் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. எனினும் தொடர்ந்து பெய்து வரும் பெருமழையால் விவசாயிகள் எதையும் செய்யமுடியாத நிலையில் உள்ளனர். (உ)

# "ஈழத்து இலக்கிய சுதந்திரத்திற்கு குரல் கொடுத்த முதல் மனிதர்"

(யாழ்ப்பாணம்)

'ஈழத்துத் தற்கால இலக்கியத்துக்கு உருவங்கொடுத்தவர் இரசிகமணி. தமிழ்நாட்டுப் படைப்புகளைப்படித்துவந்த நம்மவர்க்கு எமது நாட்டு எழுத்தாளர்களின் ஆக்கங்களை இரசிக்கப்பழக்கியவர் அவர். எங்கள் நாடு, எங்கள்எழுத்தாளர், எங்கள் நூல்கள் என்று இலக்கியச் சுதந்திரக்குரல் கொடுத்த முதல் எழுத்தாளர் இரசிகமணி கனகசெந்திநாதன்தான்'

இரசிகமணி கனக. செந்திநாதன் மறைவையொட்டி கட்டுவன் மத்தி விஸ்வநாதப்புலவர் சனசமூக நிலையத்தில் நடைபெற்ற அஞ்சலிக்கூட்டத்தில் உரையாற்றுகையில் கவிமணி வி. கந்தவனம் குறிப்பிட்டார். அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

### செந்தியின் இல்லம் இலக்கியக் களஞ்சியம்

'இரசிகமணி தமது முயற்சியை நடைமுறைப்படுத்த, தமதுவீட்டை ஒரு நவீன இலக்கியக்களஞ்சியமாக மாற்றினர். பத்திரிகைகளிலும் சஞ்சிகைகளிலும் வரும் ஈழத்தவர் படைப்புகளை வெட்டிக் கோவை செய்து வைத்தார். கவிதைகளுக்கு ஒரு கோவை; கட்டுரைகளுக்கு ஒரு கோவை; சிறுகதைகளுக்கு ஒரு கோவை, என்று ஒட்டுப்புத்தகங்கள் வேலை நடைபெறும். ஈழத்தவர் நூல் ஒன்று வெளிவந்தால் கடைக்குச் சென்று காசு கொடுத்து அதனை வாங்கும் முதல் எழுத்தாளரும் அவரே.

'எழுதுவதை எண்ணி எழுதுவார், சொல்லுவதைத் துணிந்துசொல்லுவார்இதன்காரணமாக சிலருக்கு அவர் ஒரு பிரச்னைக்குரிய எழுத்தாளராகவும் விளங்கினர். பிரச்னைகளைக் கண்டு அவர் அஞ்சவில்லை. பிரச்னைகள் அவரை இன்னும் வளர்த்தன. சிலபேர் இலக்கியப்பகைமை பாராட்டினர்கள் வரக்கூடிய சாகித்திய மண்டலப் பரிசில்களையும் வராமல் செய்ததாகக் கதை அடிபட்டது. ஆனுல் இரசிகமணி எவருடனும் பகைமை பாராட்டவில்லை. தன்னுடன் இலக்கிய முரண்பாடு கொண்டவர்களையும் அவர் மதித்து நடந்திருக்கின்ருர். இது அவரது மாசில்லாத எழுத்து உள்ளத்தை எடுத்துக்காட்டுகிறது'

பண்டிதர் செ. நடராசா தலைமையில் இக்கூட்டம் நடைபெற்றது.

கலைப்பேரரசு ஏ. ரி. பொன்னுத்துரை, ச. ச. நி. மேற்பார்வையாளர் திரு. கிருஷ்ணசாமி, திருவாளர்கள் சி. நாகலிங்கம், கே. ரி. பாலசுப்பிரமணியம், ராஜரத்தினம் ஆகியோரும் இரசிகமணிக்கு அஞ்சலி செலுத்திப்பேசினர். திரு. ஏ. வி. மாணிக்கம் நன்றி தெரிவித்துப் பேசினர். (ஈ—அ)

## மில்டன், காண்டேகர்போல் எண்ணத்தக்கவர்இரசிகமணி

(மட்டக்களப்பு)

"'வாழ்நாள்முழுவதும் இலக்கியமே மூச்சாக வாழ்ந்தவர் இரசிகமணி கனக. செந்திநாதன். ஈழத்து இலக்கிய உலகில் பல்வேறு கோஷ்டிகள் இயங்கிவந்தாலும். அந்தக் கோஷ்டிகளின் தாக்கங்களுக்கு உட்படாது சுயமாக இயங்கிய அவர், குறித்த பல்வேறுகோஷ்டியினராலும் மதித்துக் கௌரவிக்கப்பட்டார் என்பதே அவரது இலக்கிய நேர்மைக்குச் சான்ருகும். தமதுவாழ்நாளின் இறுதிக் காலத்தில் கால்களை இழந்த நிலையிலும், இலக்கியப் பணிபுரிந்த அவரது இலக்கிய உள்ளம் போற்றத்தக்கது.

பார்வை இழந்த நிலையிலும் இலக்கியம் படைத்த கவி மில்டனைப்போல், மராட்டிய எழுத்தாளர் வி. ஸ. காண்டேகரைப்போல் ஈழத்தில் எண்ணிப்பார்க்கத் தகுந்தவர் கனக செந்திநாதன்.

அவரது இலக்கிய ரசனையை மதித்து அவருக்கு 'இரசிகமணி' என்னும் பட்டம் வழங்கியது மட்டுநகர். வந்தாறுமூலை மத்திய மகாவித்தியாலயத்தில் கிழக்கிலங்கை எழுத்தாளர் சங்கத்தின் சார்பில் நடைபெற்ற இலக்கிய விழாவில் அவருக்கு அப்பட்டம வழங்கப்பட்டது. (அ)

## பஸ் விபத்தில் சாரதிக்குப் படுகாயம்

(திருகோணமலை)

திருகோணமலை நோக்கி வந்துகொண்டிருந்த இ. போ. ச. பஸ் ஒன்று கந்தளாயில் இருந்து ஐந்துமைல் தொலைவில் உள்ள கந்தபாவா என்ற இடத்தில் விபத்துக்குள்ளானதால் பஸ் சாரதி படுகாயம் அடைந்தார்.

பொலநறுவை டிப்போவைச் சேர்ந்த இப்பஸ் தடம்புரண்டபோது உள்ளே இருந்த ஏனைய மூவருக்கும் பெரியகாயம் எதுவும் ஏற்படவில்லை. படுகாயமடைந்த சாரதி திருகோணமலை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (உ)

## நீர்வை மத்தி இளைஞர்கழகம்

[யாழ்ப்பாணம்]

நீர்வேலி மத்திய இளைஞர் கழகத்தின் நடப்புவருட உத்தியோகத்தர்களாக பின்வருவோர் தெரியப் பட்டனர்.

போஷகர் திரு. எஸ். பாலசுப்பிரமணியம், திரு. ஆர். பாலசிங்கம், தலைவர் திரு. எம். சி. என். ஆனந்தரூபன், செயலாளர் திரு. எஸ். சிவபாதம், பொருளாளர் திரு. கே. கணேசராசா, விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் திரு. ஆர். சௌந்தரராஜன்

கிராமாபிவிருத்தியையும் சனசமூக நிலையம் அமைத்தலையும் குறிக்கோளாக இக் கழகம் கொண்டுள்ளது. [கூ-அ]

## முக்கிய மருந்து தட்டுப்பாடு

[பண்டத்தரிப்பு]

வட்டுக்கோட்டை அரசினர் வைத்தியசாலைகளில் முக்கிய மருந்து வகைகளுக்குப் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. சுகாதார இலாகா மேலிடத்துடன் தொடர்பு கொண்டு இவ்வைத்திய சாலைக்குத் தேவையான மருந்து வகைகளை அனுப்பி வைப்பதற்கு ஏற்ற நடவடிக்கை மேற்கொள்ளுமாறு வட்டுக்கோட்டை தொகுதி தேசிய அரசுப் பேரவை உறுப்பினரை இப்பகுதி மக்கள் வேண்டியுள்ளனர். (அ)

5124381

Regal (Jaffna)
Daily at 4-45 7 & 9-30 P. M. only
LEX BAKER in
Fury Of The Saburs
[Color Scope]

ஸ்ரீதர் (யாழ்ப்பாணம்)
தினசரி 10-30, 2-30, 6-30, 9-30
எம். ஜி. ஆர். சரோஜாதேவி
நடித்த
தாயைக் காத்த தனயன்
(புதிய பிரதி)

6-வது வெற்றி வாரம்!
ராஜா யாழ்நகர்
தினசரி 10-30, 2-15, 6-15, 9-45
கே. எஸ். கோபாலகிருஷ்ணனின் அற்புதப் படைப்பு!
ஜெமினி, ஜெயசித்திரா கே. ஆர். விஜயா
நடித்த
தசாவதாரம்
(கலர்)
(கண்ணபிரானின் பத்து அவதாரங்கள்)
[பாடசாலை மாணவர்கள் முன்கூட்டியே ஆசனங்களைப் பதிவுசெய்துகொள்ளலாம்]

மனோஹரா (யாழ் நகர்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி கணேசன்-ஜெமினி கணேசன்
சுப்பையா - லக்ஷ்மி - நிர்மலா
நடிக்கும்
சுஜாதாவின்
உனக்காக நான்
(ஈஸ்ட்மன் கலர்)

ராணி (யாழ்ப்பாணம்)
ஜெய்சங்கர் - பத்மினி - லக்ஷ்மி
முத்துராமன் - நாகேஷ் - சச்சு
தினசரி காலை 10-30, பிற்பகல் 2-30, 6-30 9-30
தேவரின்
பெண் தெய்வம்

வெலிங்டன் (யாழ் நகர்)
தினசரி 4 காட்சிகள்
துணிவே துணை

லிடோ (யாழ்.நகர்)
எம். ஜி. ஆர். லதா நடித்த
போன்; 7693
நீதிக்கு தலைவணங்கு

## புதிய தொழிற்சங்கம்

[பண்டத்தரிப்பு]

"தமிழ்ப் பிரதேசங்களிலுள்ள உள்ளூராட்சி மன்றங்களில் கடமை யாற்றிவரும் சிறுசேவை ஊழியர்கள் இதுவரைகாலமும் தமக்கென ஒரு தொழிற்சங்கம் இல்லாது மிகவும் சிரமப்பட்டார்கள். நாங்கள் புதிதாக அமைத்திருக்கும் இச்சங்கம் இப்பகுதிகளிலுள்ள சிறுசேவை ஊழியர்கள் நீண்ட காலமாக அனுபவித்து வரும் குறைபாடுகளைத்தீர்த்து வைக்கும் என்று நம்பலாம்".

இவ்வாறு ஜனநாயக உள்ளூராட்சி மன்ற சிற்றூழியர்கள் சங்கம் என்ற புதிய தொழிற்சங்க அங்குரார்ப்பணக் கூட்டத்திற்குத் தலைமை வகித்துப் பேசுகையில் பண்டத்தரிப்புக் கிராமசபையைச் சேர்ந்த திரு. க. சுப்பிரமணியம் குறிப்பிட்டார்.

உடுவில் கிராமசபை மண்டபத்தில் நடைபெற்ற இக்கூட்டத்தில் யாழ் குடாநாட்டின் பல்வேறு பகுதிகளிலுமுள்ள உள்ளூராட்சி மன்றங்களைச் சேர்ந்த பெருந்தொகையான சிற்றூழியர்கள் கலந்து கொண்டனர். சங்கத்தின் நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர். தலைவர் க. சுப்பிரமணியம், உபதலைவர் ந. நல்லதம்பி, செயலாளர் ம. ஞானப்பிரகாசம், பொருளாளர் எஸ். விஜயரத்தினம், நிர்வாக சபை உறுப்பினர்களாக, சோ. ராஜகோபால், த. அழகரத்தினம், சி கந்தசாமி, என். அழகரத்தினம்.

(அ]

றியோ (யாழ்ப்பாணம்)
தினசரி 10-30, 2-30, 6-30, 9-30.
ஷம்மிகபூர்
புரொபஸர்
(PROFESSOR) (Hindi)
(Color)

நாகம்ஸ்
(சுன்னாகம்)
தினசரி 6-45, 10-00
சனி, ஞாயிறு பி. ப. 2-30
ஜெமினி - வைஜெந்திமாலா
பார்த்திபன் கனவு

4-வது வாரம்
வெஸ்லி
(மானிப்பாய்)
தினசரி 2-30, 6-30, 9-30
எம். ஜி. ஆர்.
உலகம் சுற்றும் வாலிபன்
(கலர்)

புலோலி சினிமாஸ்
(பருத்தித்துறை)
தினசரி 2-30, 6-30, 9-30
சனி, ஞாயிறு 4 காட்சிகள்
எம். ஜி. ஆர்-லதா
உழைக்கும் கரங்கள்

ஆசிரியருக்குக் கடிதம்:

## உண்மையான ஐக்கியம் ஏற்படுமா?

திரு. ஜே ஆர். ஜெயவர்த்தன தலைமையில் ஐ. தே. கட்சியின் புதிய அரசாங்கம் பதவியேற்று நாட்டில் தமிழருக்கெதிரான வன்முறைச் சம்பவங்களும் நடைபெற்று ஓய்ந்து போயிருக்கும் இவ்வேளையில் தான் வரவுசெலவுத் திட்ட விவாதம்தேசிய அரசப்பேரவையிலே விவாதிக்கப்பட்டு வருகின்றன. தமிழரைப் பொறுத்தவரையிலே தனிநாட்டைத் தவிர வேறு வழி கிடையாது என்ற நிலைக்கு தள்ளப்பட்டும். ஐ. தே. கட்சி தலைவரும், பிரதமருமான ஜே ஆரின் தலைமையில் சற்று நம்பிக்கைவைத்து எமது புரட்சிகர இளந்தலைவர்கள்கூடப் பேச்சுவார்த்தை மூலம் இலங்கைத் தமிழர் பிரச்னைக்குத் தீர்க்கமான முடிவு காணும்படி தேசிய அரச பேரவையிலே வேண்டுகோள் விடுவது, தேசிய ஐக்கியத்தை விரும்பும் மக்களின் மனதுக்கு சற்று இதமாகத்தான் இருக்கின்றது

தேசியஐக்கியத்தை எப்பாடுபட்டும் நிலைநாட்டியே தீருவோம் என நீர்ப்பாசன நெடுஞ்சாலைகள் அமைச்சரும் இளம் தலைவருமான திரு. காமினி திஸநாயகாவும் கூட அறைகூவியிருக்கின்றார். ஆனல் அதே அரசாங்கத்தைச் சேர்ந்த சிலர் பேசியதாகப் பத்திரிகைகளில் வெளிவந்தசெய்திகளைப் பார்க்கையில் உண்மையிலேயே தமிழர் பிரச்னைக்கு இந்த அரசாங்கமாவது முடிவான தீர்மானத்தை எடுக்குமா என்பது சந்தேகமாகத்தான் இருக்கின்றது.

"கலவரத்துக்குத் தமிழர் விடுதலைக் கூட்டணியினரின் பேச்சே காரணமென்றும், சிங்களம் அரசகரும மொழியாக இருக்கும் அதேவேளையில் வடக்கு கிழக்கு மாகாணங்களில் தமிழுக்கு உரிய இடம் வழங்கப்பட்டுள்ளதென்றும், தமிழர்களுக்கு தென்இந்தியா இருக்கிறதென்றும், சிங்களவர்களுக்கு இலங்கை மட்டும்தான் இருப்பதாகவும் சிலர் பேசிவருகின்றதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.'

இவர்களின் கூற்றுப்படி தமிழர்கள் எல்லோரும் தென்இந்தியாவைச் சேர்ந்தவர்கள் என்றும், அடிகொடுத்து தென்இந்தியாவுக்குக் கலைத்துவிடலாமென்றும் எதிர்பார்க்கின்றனரா? அப்படி எல்லாத் தமிழர்களும் அடித்து தென்இந்தியாவுக்கு விரட்டப்படுவார்களானல் இந்தியாதான் அவர்களை ஏற்றுக்கொள்ளுமா?

தேசியம், ஐக்கியம், மும்மொழித்திட்டம்போன்ற இன ஒற்றுமைக்கான வழியிலே பிரதமர் ஜே. ஆரும் மற்றும் உண்மையிலேயே தேசிய ஐக்கியத்தை விரும்பும் சிங்களத் தலைவர்களும், மக்களும் முயற்சிக்கும் இதேவேளையில் இதே அரசாங்கத்தைச் சேர்ந்த சிலரின் இப்படியான பேச்சு எப்படி முழுச்சிங்கள மக்களின் மனதில் பதிந்து இந்த தேசிய பிரச்னைக்கு விடிவு காணப்போகின்றது?

எகிப்திய தலைவர் அன்வர் சதாத் இஸ்ரேலுக்குச்சென்று அவர்களுடைய பாராளுமன்றத்திலேயே பாலஸ்தீனியர்களுக்கும், அராபியர்களுக்குமான உரிமைப் பிரச்னையை எவ்வளவு ஆணித்தரமாகவும் துணிச்சலாகவும் எடுத்தியம்பியுள்ளார். எமது நாட்டிலுள்ள எந்தவொரு பெரும்பான்மைத் தலைவருக்கும் இப்படியான ஒரு இயல்புதோன்றமுடியுமா?

இனிமேலும் பெரும்பான்மை சிங்களத் தலைவர்கள் போட்டி பொறாமைகளைத் தவிர்த்து தமிழ்மக்களாகிய தங்களுடைய சகோதர இனத்துக்கும் சம்மானங்களைக் கொடுத்து அவர்களிடையே பிரிவினை மனோநிலை எழுவதற்கும் காரணம் ஏற்படாமல் நடந்துகொள்ள எத்தனிப்பார்களாக.

கே. கே. சாமி.
வண்ணார்பண்ணை.

## சென் பற்றிக்ஸ் சாதனை

[யாழ்ப்பாணம்]

ஐ. நா. தினத்தையொட்டிக் கல்வி அமைச்சினல் வடபிராந்திய அடிப்படையிலும் யாழ் கல்விவட்டார அடிப்படையிலும் நடாத்திய பாடசாலை மாணவர்களுக்கிடையிலான பேச்சுப் போட்டிகளில், சம்பத்திரிசியார் கல்லூரி எச். என். ஸி. ஈ. வர்த்தகப் பிரிவு மாணவரான செல்வன் ஸி. ரி. எட்வேர்ட் முதலாவது பரிசைத் தட்டிக்கொண்டார்.

ஐ. நா. தினத்தையொட்டி இதே அடிப்படையில் அமைச்சு நடத்திய கட்டுரைப் போட்டியிலும் சம்பத்திரிசியார் கல்லூரி மாணவன் கல்வி வட்டாரப் பிரிவில் முதலிடத்தைப் பெற்றுர். எச். என். ஸி. ஈ. விஞ்ஞானப் பிரிவைச் சேர்ந்த இவரது பெயர் ச. எட்மண்ட் றெஜினுல்ட் ஆகும். ஆங்கிலக்கட்டுரைப் போட்டியில் யாழ். வட்டாரப்பிரிவில் இதே கல்லூரியைச் சேர்ந்த ஐ டி எம். ரஞ்சி ஆங்கிலக் கட்டுரைப் போட்டியில் இரண்டாவது இடத்தைப் பெற்றுர்.

யாழ். பரியோவான் கல்லூரித் தமிழ் மன்றம் நடத்திய இராமாயணம் பற்றிய விவாதப் போட்டியிலும்சம்பத்திரிசியார் கல்லூரி மாணவன் முதற் பரிசுபெற்றது குறிப்பிடத்தக்கது. 'இராமாயணம் சிறந்தது பரதனுல்' என்ற தலைப்பில் இலக்கிய மேற்கோள்காட்டிப் பேசி க. பொ. த. [உயர்தர] கணிதப் பிரிவைச் சேர்ந்த ந. விஜயரத்தினம் என்ற மாணவரே விவாதத்தில் முதற் பரிசைத் தட்டிக்கொண்டவராவர்.

[அ]

## திருப்பணி வேலைகள் ஆரம்பம்

[நெல்லியடி]

கரவெட்டி அந்திரான் முருகமூர்த்தி ஆலய கட்டிட திருப்பணி வேலைகள் ஆரம்பமாகியுள்ளன.

பல்லாயிரக்கணக்கான ரூபா செலவில்ஆரம்பிக்கப்பட்டுள்ள இக்கட்டிடத் திருப்பணி வேலைகளை மல்லாகத்தைச் சேர்ந்த சிற்பாசிரியர் திரு. கே வைரமுத்து பொறுப்பேற்றுள்ளார்.

மேற்படி திருப்பணிவேலைகளுக்கான நிதியுதவிகளை வர்த்தகப்பிரமுகர்கள் பொது மக்கள் ஆகியோர் வழங்கியுள்ளார்கள்.

[உ]

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க

வின்ஸர் யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
தென்னகத்தில் 100 நாட்களுக்கு மேல் ஓடிய வெற்றிச் சித்திரம்
★ கமலஹாசன் ★ ரஜனிகாந்த்
★ எம். எஸ். விஸ்வநாத் ★ ஸ்ரீதேவி
★ ஓய். விஜயா ★ அநுபாமா
R. M. S. புரொடக்ஷன்ஸ் அளிக்கும்
மூன்று முடிச்சு
திரைக்கதை, வசனம், டைரக்ஷன் கே. பாலசந்தர்.

சாந்தி (யாழ். நகர்)
போன்; 7642
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
சிவாஜி.... பானுமதி....
பாலையா.... தங்கவேலு....
நடித்த
அம்பிகாபதி

மனிதனது அவா அளவு கடந்து செல்கிறது. அது பெருகி வானமுகட்டுக்குஞ் செல்லும்; சமுத்திரத்தின் ஆழத்திற்குஞ் செல்லும்; ஆகையால் அதை அடக்க வேண்டும்.

—காந்திமகான்


# ஈழநாடு
The Eelanaadu


## பட்ஜட் விவாதம்!

திரு ஜே. ஆர். ஜயவர்த்தனவைத் தலைவராகக் கொண்ட ஐக்கிய தேசியக் கட்சி அரசின் முதலாவது வரவு-செலவுத் திட்டத்தின் மீதான விவாதம் இப்போது தேசிய அரசுப் பேரவையில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

இந்தவிவாதத்தை எதிர்க் கட்சித்தலைவர் என்ற முறையில் தமிழர் விடுதலைக் கூட்டணியின்செயல் அதிபர்களில் ஒருவரான திரு. அ. அமிர்தலிங்கம் நல்லமுறையில் விமர்சித்திருந்தார் என்றுபலருமே பாராட்டியிருந்தனர்.

இந்த விவாதத்தில் திரு. அமிர்தலிங்கம் பேசிக் கொண்டிருக்கையிலேயே "தமிழ் ஈழப்பொருளாதாரம்" பற்றி குறுக்கீடு செய்த ஒருவருக்குத் தமது பொறுப்பு எத்தன்மையது என்பதையும் திரு. அமிர்தலிங்கம் சரியாகச் சுட்டிக் காட்டியிருந்ததை பேரவை உறுப்பினர்களும் வாசக நேயர்களும் அறிவார்கள்.

தேசிய அரசுப் பேரவைக்குள் உறுப்பினர்கள் எந்த விஷயத்தையும் பேசுவதற்கு அவர்களுக்கு பரிபூரண உரிமை இருக்கின்றது.

ஆனாலும் வரவு- செலவுத் திட்டவிவாதத்தை தமிழ் ஈழத்தின் தலைவர் என்ற முறையில் அல்லாமல் எதிர்க் கட்சித்தலைவர் என்ற முறையில்தான் நல்லபடியாக விமர்சித்திருந்தாரென்று பலர் பாராட்டிய போதிலும் சிலர் "தமிழ் ஈழம்" பற்றியும் தமிழர்கள் இந்தியாவுக்கு விரட்டியடிக்கப்பட வேண்டுமென்ற எவ். ஆர். ஜெசூரியா போன்ற குரல்களும் ஒலிக்கத்தான் செய்திருக்கின்றன.

வரவு-செலவுத்திட்ட விவாதத்தில் நாட்டின் பொருளாதார நிலையை எடுத்துச் சொல்வதற்குப் பதிலாக இனப்பிரச்னைகளை எதற்காகக் கிளப்பவேண்டுமென்பது புரியாமலிருக்கின்றது.

பொருளாதாரத் திட்டங்களில் சிறுபான்மையினர் புறக்கணிக்கப்பட்டுவந்திருக்கிறார்கள் என்று தமிழர் விடுதலைக்கூட்டணியினர் இந்த விவாதத்தில் பேசுகையில் எடுத்துச்சொன்னால் அதற்கு வகுப்புவாத முத்திரையைக்குத்துவது நியாயமல்ல. அதற்கு மாறாக அவர்களின் குறைகளைத் தெரிந்து நிவர்த்தி செய்ய வேண்டியது பெரும்பான்மையினரின் கடமை.

"சிறுபான்மையினரின் வகுப்புவாதத்தைவிட பெரும்பான்மையினரின் வகுப்புவாதம் மிக ஆபத்தானது" என்று ஆசிய ஜோதியாக விளங்கிய அமரர் ஜவஹர்லால் நேருவின் வார்த்தையை நாம் நினைவூட்டுகின்றோம்.

# திருமலை-மூதூர் படகுச் சேவை பாதிப்பு

(திருகோணமலை)

கடும் காற்றினால் கடல் கொந்தளிப்பு ஏற்பட்டு மூதூர் புதிய இறங்குதுறையில் துறைமுகக் கமிஷனால் புதிதாக அமைக்கப்பட்ட பாலம் தகர்த்தெறியப்பட்டது.

இப்பகுதியை அண்டியிருந்த கடைகள் பலவும் கடும் காற்றினால் பாதிக்கப்பட்டன.

இதனால் திருமலை மூதூர் இயந்திரப் படகுச் சேவையும் பாதிக்கப்பட்டன.

திருமலைக் கடற்கரைப் பகுதி வீடுகளுக்கு ஏற்படவிருந்த ஆபத்துக் குறித்துத் திருமலை நகர விசேஷ ஆணையாளரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டதையடுத்து அவர் கடல் நீர் உட்புகாது தடுக்கும் வகையில் 1000 மண் மூடைகளை அணைபோடக் கொடுத்துதவினார். (உ)

## நல்லையில் கார்த்திகை விழா

[யாழ்ப்பாணம்]

அகில இலங்கைத் திருப்புகழ் மன்றம், ஒவ்வொரு மாதமும் நடாத்தும் கார்த்திகை விழா, நாளை வெள்ளிக்கிழமை நல்லை ஞானசம்பந்தர் ஆதீனத்தில் நடைபெறவுள்ளது. இவ்விழாவுக்கு மன்றத்தின் தலைவர் திரு. துரைராஜசிங்கம் தலைமைதாங்குவார். இவ்விழாவில் திரு. நித்தியானந்தசர்மாவின் கதாப்பிரசங்கம் சிறப்பு நிகழ்ச்சியாக இடம் பெறும். (செ உ)

# அ.மி. பாடசாலை வளர்ச்சியில் மகாஜனமாணவர் அக்கறை

(மாவிட்டபுரம்)

மாவிட்டபுரம் அமெரிக்கன் மிஷன் பாடசாலையைத் தரம் உயர்த்தி, மாணவர்களது தொகையை அதிகரித்து ஏழை மாணவர்களுக்குக் கல்வி பயிலத் தேவையான புத்தகங்களையும், வேறு உபகரணங்களையும் வழங்கி தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி கல்வி அபிவிருத்திச் செயல் திட்ட மாணவர்கள் முன்வந்துள்ளனர்.

இப்பாடசாலை அபிவிருத்தி குறித்து ஆராய இம்மாணவர்கள் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி அதிபர் திரு பொ. கனகசபாபதி தலைமையில்மேற்படி பாடசாலையில் கூட்டமொன்றை நடத்தினர்.

இதையடுத்து பாடசாலை வளவில் மரம் நாட்டுதலிலும் ஈடுபட்டனர்.

மாவிட்டபுரம் அமெரிக்கன் மிஷன் பாடசாலை அதிபர் திரு பொ. நடராசா. செல்வன் க. விபாகரன். பெற்றோர் ஆசிரியர் சங்கச் செயலாளர் த. குணரத்தினம், திருமகள் சனசமூக நிலையத்தலைவர் திரு. க. திசைவீரசிங்கம், செல்வன் வி. ஹரிகரன் செல்வி பகிரதி ஆகியோர் இவ்வைபவத்தில் பங்கு பற்றி கருத்துரை வழங்கியதுடன் இப்பாடசாலை வளர்ச்சிக்காக எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் பற்றியும் ஆராய்ந்தனர்.

## எங்களுக்கு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வந்த பின்னரும், தமிழ்மக்களின் பிரச்னைகளைத் தீர்த்து விடப்போவதாகக் கூறினீர்கள். நீங்கள் நினைத்திருந்தால் 24 மணி நேரத்தில் தமிழ்மக்களின் பிரச்னைகளைத் தீர்த்து வைத்திருக்கமுடியும். ஆனால் இது நடக்கவில்லை.

"பட்ஜட்டை வைத்துக் கொண்டு உங்களுக்கு எதிரான நடவடிக்கைகளை மக்களின் ஆதரவுடன் மேற்கொள்ள மாற்றுக்கட்சியினர் முயன்று வருகின்றனர். பொலிஸ் படையும் உங்களுக்குச் சாதகமாக இல்லை. ஆகஸ்ட் மாதக் கலவரத்தை அடக்கமுடியாமற்போனதற்கு இதுதான் முக்கிய காரணம். முந்திய அரசின் வழியில்தான். நீங்களும் செல்கின்றீர்கள் என்று சிங்கள மக்களே கூறுகின்றார்கள். கடந்த அரசாங்கத்துக்கு ஏற்பட்ட கதியைநீங்கள் உணரவேண்டும்.

### புதுமை ஒன்றும் இல்லையே

"நாங்கள் சிங்கள மக்களுடன் சமமாக வாழவே விரும்புகின்றோம். நாங்கள் புதுமையாக எதனையும் கேட்கவில்லை. ஐக்கியநாடுகள் சாசனத்தின் கீழ் அமையும் மனித அடிப்படை உரிமையை தருமாறுதான் கேட்கின்றோம் எங்களது உரிமையை நீங்கள் மறுப்பது, ஐ. நா. சாசனத்தையே மீறுவதுபோலாகும். "எங்களது உரிமைகள் மறுக்கப்படும் வரை உங்களுக்கும் எங்களுக்கும் உள்ள உறவு, தாமரை இலைத் தண்ணீர் போலவே இருக்கும்.

"300 ரூபா வருமான எல்லையை 500 ரூபாவாக அரசாங்கம் அதிகரிக்கவேண்டும். அரிசியைவிட மாவுக்கு கூடுதலாக மான்யம் ஒதுக்கப்பட்டுள்ளது. அரிசிக்கு கூடுதலான மான்யம் ஒதுக்கப்பட்டிருந்தால், அரிசியின் விலை குறைந்திருக்கும். இலவசஅரிசி வெட்டினால் மக்கள் அதிகமாகப் பாதித்திருக்கமாட்டார்கள்" என்று தீவுப்பகுதி எம். பி. பண்டிதர் கா. பொ. இரத்தினம் கூறினர். (ம)

## அனுதரவான பார்சலால் பஸ்ஸில் பீதி

[சங்கானை]

பஸ்ஸில் அனுதரவாகக் கைவிடப்பட்டிருந்த பார்சல் ஒன்று பஸ் கண்டக்டர், சாரதி பிரயாணிகளைப் பீதியடையச் செய்துவிட்டதாம்.

காரைநகரிலிருந்து யாழ்ப்பாணம் வந்துகொண்டிருந்த பஸ்ஸில் அனுதரவாகக் கிடந்த இப்பார்சலை சுழிபுரத்தில் பஸ் வந்துகொண்டிருந்தபோது கண்ணுற்ற கண்டக்டர் இப்பார்சலை எவரும் ஏற்க மறுத்ததையடுத்து, அப்பார்சலுக்குள் கைக்குண்டு இருக்கலாமென்ற பயத்தினால் சங்கானைப் பொலிஸ்நிலையத்தில் புகார் செய்தார்.

பொலிஸ்நிலையத்திற்கு வந்த பஸ்ஸில் இருந்த பொலித்தீன் பையினால் சுற்றப்பட்டிருந்த பார்சலைப் பொலிஸார் அவிழ்த்துப் பார்த்தபோது அதற்குள்ளிலிருந்து இரண்டு பூனைகள் வெளிவந்தனவாம்.

### மரண அறிவித்தல்

**காசிப்பிள்ளை சதாசிவம்**

நீர்வேலியைச் சேர்ந்த முன்னாள் உரும்பராய் சந்திரோதய வித்தியாசாலை ஆசிரியரான காசிப்பிள்ளை சதாசிவம் காலமானார். ஈமக்கிரியைகள் நீர்வேலி மத்தியிலுள்ள அன்னாரின் இல்லத்தில் இன்று வியாழக்கிழமை (24-11-77) மாலை 4-00 மணிக்கு நடைபெறும்.

தகவல்: ச. சண்முகநாதன்

7762

## இரத்நாயக்கா இறுதிச் சடங்கு இன்று

[கொழும்பு]

காலஞ்சென்ற முன்னாள் எம். பி யும், செனட்சபைத் தலைவருமான திரு. ஏ. இரத்நாயக்காவின் இறுதிச் சடங்குகள் இன்று கனத்தை பொது மயானத்தில் நடைபெறும்.

## அக்டோபர் புரட்சி ஆண்டு விழா நாளை யாழ்ப்பாணத்தில்

(யாழ்ப்பாணம்)

அக்டோபர் புரட்சியின் 60வது ஆண்டுவிழா நாளை வெள்ளிக்கிழமை மாலை யாழ். ராஜா தியேட்டர் மண்டபத்தில் நடைபெறும்.

எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில், மானிப்பாய் எம். பி. திரு. வி. தர்மலிங்கம், யாழ்ப்பாண எம். பி. திரு வெ. யோகேஸ்வரன், கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த திரு. அ. வயித்திலிங்கம் சமசமாஜக் கட்சியைச் சேர்ந்த திரு. வே. பொன்னம்பலம் விழா அமைப்பாளர் திரு. வி. பொன்னம்பலம், திரு. சிவாகணேசன் ஆகியோர் உரையாற்றுவார்கள்.

## புயலின்..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சுமார் 20 அடி உயரத்தில் எழுந்த கடல்அலைகள் நூற்றுக்கும் அதிகமான கிராமங்களை அடித்துச் சென்றுவிட்டதாக அறிவிக்கப்பட்டது.

இறந்தவர்களின் சடலங்கள் ஆயிரக்கணக்கில் வீதிகளில் காணப்படுகிறது! இவற்றை அப்புறப்படுத்துவது ஆகக்கூட பெரும்பிரச்னையாகத் தோன்றியுள்ளது.

## டைனமைற்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மான அம்பலவாணர் தாம் போதி மீன் பிடிப்பதற்குப் பாவிக்கப்படும் டைனமைற் வெடியினால் பலவீனமடைந்து வருவதாகவும் தொடர்ந்து இந் நிலைமை நீடித்தால் பாலத்திற்குச் சேதம் ஏற்படுத்தி மக்களின் பிரயாணசேவை பாதிக்கப்படவும் அரசினருக்குப் பெருஞ்செலவு ஏற்பட இடமும் இடமளிக்கும். (கூ)

## பிரெஞ்சு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

னைப் பொலிசார் விசாரித்தபோது அந்த இளைஞன், பிரெஞ்சு ஜனாதிபதியைக் கொலைசெய்யவே மாளிகைக்குள் நுழைந்தேன் என்று கூறினன்" என்று அறிவித்துள்ளது!

(5-ம் கலத் தொடர்ச்சி)

களாகத்தானிருக்கிறது. எது பொய் எது உண்மை என்பதைக் கண்டுகொள்வதே கஷ்டம்தான்!

—ஊர்சுற்றி

## நாடும் நடப்பும்

தமிழ்நாட்டில் வீசிய சூறாவளி நமது நாட்டையும் பயமுறுத்திக்கொண்டிருந்தது. இதைவிட ஒருநாள் இரவு இலங்கை ஒலிபரப்புக்கூட்டுத்தாபனம் தனது சேவையில் இலங்கை வானிலை அவதான நிலையத்தின் அறிவிப்பை ஒலிபரப்பி மட்டக்களப்பு மக்களை அதிகம் பயமுறுத்திக் கொண்டிருந்தது.

எப்படியோ தலைக்கு வந்தது தலைப்பாகையோடு போயிற்று என்று நாம் நிம்மதியடையலாம்.

ஆனால் தமிழ்நாட்டில் ஏற்பட்ட அழிவுபற்றிய கவலை தீரமுன்பே ஆந்திராவில் ஏற்பட்டுள்ள அழிவு பெரும் கலக்கத்தை ஏற்படுத்துகிறது.

தமிழ்நாடு, ஆந்திரா, கர்னாடகம் ஆகிய மாநிலங்களை மட்டுமல்லாது இப்போது கேரளத்தையும் கோரப்புயல் தாக்கியிருக்கிறது.

தென்னிந்திய மாநிலங்களுக்கு ஏன்தான் இப்படியொரு சோதனை ஏற்பட வேண்டுமென்பது நினைக்கவே முடியாமலிருக்கிறது.

வரலாறுகாணாத பேரழிவு ஏற்பட்டிருக்கிறது. ஆண்டவன்தான் அவர்களுக்கு ஆறுதல்கொடுக்கவேண்டும்.

0 0 0

இந்த இயற்கையின் சீற்றம் ஒருபுறமிருக்க தமிழ்நாட்டு அரசியல் பற்றி அங்கிருந்து கிடைக்கும் ஓரிரு பத்திரிகைகளைப் பார்க்கும்போது இப்படியுமா அரசியல் பிழைப்பு நடத்தவேண்டும்? என்று ஆச்சரியப்பட வேண்டியிருக்கிறது.

இந்திராவின் காங்கிரசைச் சென்ற பொதுத்தேர்தலில் தென்னாடு ஆதரித்ததே இந்த அழிவுக்கு காரணமென்று ஒருசாராரும், சமீபத்தில் தென்னாட்டுக்கு வந்த இந்திராவுக்கு எதிராகச் செய்த ஆர்ப்பாட்டங்களே இவற்றுக்குக் காரணம் என்றும் சிலர் கூறுகின்றனர்.

கலைஞர் கருணாநிதியைச் சிறைவைத்ததே தமிழ்நாட்டில் ஏற்பட்ட அழிவுக்குக் காரணம் என்று இங்குள்ள சிலரும் கூறுகின்றனர்.

"அரசியல் பிழைத்தோர்க்கு அறங்கூற்றாகும்" என்ற சிலப்பதிகார வார்த்தையை இவர்கள் கலைஞரின் பாணியில் எடுத்துக்காட்டுகின்றனர்.

0 0 0

இப்போது கல்விநிலையங்களில் நடைபெறும் பரீட்சைகளுக்கான வினாத்தாள்கள் முன்னதாகவே வெளியாகிவிடுகின்றன. இதனால் கஷ்டப்பட்டுப் படித்த மாணவர்களும், கடின உழைப்பின் மூலம் படிப்பித்த மாணவர்களும் பெரும் கவலையடைகின்றனர்.

'ரியூட்டரி'களுக்கும் கல்லூரி ஆசிரியர்களுக்கும் உள்ள தொடர்புதான் இப்படி வினாத்தாள்கள் அவற்றுக்குரிய விடைகளுடன் முன்னதாகவே வெளிவரக் காரணமென்றும் பரவலாகப் பேசப்படுகின்றது! எல்லாமே தில்லுமுல்லு

(4-ம் கலம் பார்க்க)

# மரண அறிவித்தல்

**S. N. K. சுந்தரம்**

யாழ்ப்பாணம் 33 தேவாலய வீதியைச் சேர்ந்தவரும், மலேசிய வர்த்தகரும், புங்குடுதீவு மேற்கைச் சேர்ந்தவருமான நல்லதம்பி கனகசுந்தரம் மலேசியாவில் காலமானார். இவர் மீனாட்சிஅம்மாவின் அன்புக் கணவரும், திருமதி செல்வராணி மகாலிங்கம், சுகந்தமலர், சுந்தரமோகன், சுந்தரபவானி, சுந்தரரூபன் ஆகியோரின் அன்புத் தந்தையும், மகாலிங்கத்தின் (இலங்கை மின்சாரசபை கொழும்பு) அன்பு மாமனாரும் சரவணனின் பேரனுமாவார் அன்னாரின் பூதவுடல் தகனக்கிரிகைகளுக்காக மேற்படி இல்லத்திலிருந்து இன்று (24-11-77) காலை 10 மணியளவில் வில்லூன்றி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

7757

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் வெள்ளோவில் ரோடிலுள்ள 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1977-ம் ஆண்டு நவம்பர் மாதம் 24-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanaadu, Post Box No. 49, Jaffna. Telegram Eelanaadu Telephone 389. Registerd as News paper in Sri Lanka.